பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 8 புதன்கிழமை 15.04.2022 கதிர் 30

## 24 மணிநேரத்தில் சிறுவன் உட்பட 7 பேர் பரிதாபச் சாவு

நாட்டில் இன்று காலை 6 மணியுடன் முடிவடைந்தகடந்த24மணித்தியாலங்களில் வாகன விபத்துக்கள் காரணமாக 13 வயது சிறுவன் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி - எல்பிட்டிய வீதியில் நேற்று பிற்பகல் மோட்டார் சைக்கிள் மீது லொறி மோதியதில் எல்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 48 வயதான நபர் 2

# கோட்டா மௌனம் கலைய வேண்டும்



## நாமல் வலியுறுத்து

மக்கள் ஏன் அரசின் மீது கோபமாக உள்ளனர் என்பது தமக்குப் புரிகின்றது எனத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எம்.பி., 2

## காலிமுகத்திடல் போராட்டத்துக்கு கத்தோலிக்க சபையினரும் ஆதரவு




பெறும் கொழும்பு - காலிமுகத்திடல் போராட்டத்துக்கு கத்தோலிக்க சபை ஆதரவு வழங்கியுள்ளது.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்றநிலைப்பாட்டில் கத்தோலிக்க சபையும் இருக்கின்றது என்று மேற்படி சபையின் ஊடகப்பேச்சாளர் வணபிதா சிறில் காமினி தெரிவித்துள்ளார். 2

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நடை

## லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் இராஜினாமா!



நாட்டு மக்களுக்கு சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொடுக்க முடியாத காரணத்தை முன்னிலைப்படுத்தி லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெசேரா ஜெயசிங்க இன்று பதவி விலகியுள்ளார்.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து தான் விலகிக்கொள்கிறேன் என 2

## பஸிலுக்குக் கொரோனா உறுதி



முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ எம்.பிக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இந்நிலையில், சிகிச்சைகளுக்காக அவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## மக்கள் போராட்டத்தை திசை திருப்ப முயற்சி

### மஹிந்த மீது ஜே.வி.பி. குற்றச்சாட்டு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதே போராட்டக்களத்தில் உள்ள மக்களின் ஏகோபித்த கோரிக்கையாக உள்ளது. இந்நிலையில், போராட்டத்தின் நோக்கத்தைத் திசை திருப்பவும், போராட்டக்காரர்கள் 2

## கோட்டா அரசுக்கு எதிரான பிரேரணை ஒத்திவைப்பு?

கோட்டாபய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சபாநாயகரிடம் கையளிக்கும் நடவடிக்கையை தற்காலிகமாக ஒத்திவைப்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி பரிசீலித்து வருகின்றது. நாடாளுமன்றம் எதிர்வரும் 19ஆம் திகதி 2

## கோட்டாபய அரசுக்கு எதிராக நுவரெலியாவில் போராட்டம்



ஜனாதிபதியையும் தற்போதைய அரசையும் பதவி விலகுமாறு கோரி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றநிலையில் சித்திரைப் புத்தாண்டு 2

## ஜனாதிபதியைப் பதவி விலகக் கோரி முன்னாள் கிரிக்கெட் வீரர் போராட்டம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கொழும்பு - காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துக்கு நீதி வேண்டும் எனக் கோரியும் இலங்கைகிரிக்கெட்அணியின் முன்னாள் வீரர் தம்மிக்க பிரசாத் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் 2

# மக்கள் திரண்டு விரட்டுவதற்கு முன் 2015 போல் கௌரவமாகப் பதவி விலக வேண்டும் மஹிந்த!



## முன்னாள் அமைச்சர் விமல் பகிரங்க எச்சரிக்கை

2015 ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியையடுத்து, கௌரவமான முறையில் மஹிந்த ராஜபக்ஷ வெளியேறினார்.

அதனால்தான் மக்கள் அவரை மறுபடியும் ஆதரித்தார்கள். எனவே, மக் கள் அணிதிரண்டு விரட்டும்வரை காத்திருக்காமல், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும்.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார். 2

## மக்கள் போராட்டத்தை.......

மத்தியில் பிளவை ஏற்படுத்துவதற்காகவுமே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பேச்சுக்கு அழைத்துள்ளார்.

-இவ்வாறு ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

அரசுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்று வந்த நிலையில் இளைஞர்களும் யுவதிகளும் இணைந்து கடந்த 9ஆம் திகதி கொழும்பு - காலிமுகத்திடலில் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இந்தப் போராட்டத்தை முதலில் பொருட்படுத்தாது இருந்த அரசு, பின்னர் அச்ச சூழலை உருவாக்கி அந்தப் போராட்டத்தைக் குழப்புவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

அது சாத்தியமாகாத பட்சத்தில் அடிப்படைவாத பிரச்சினை ஒன்றைத் தோற்றுவிப்பதன் ஊடாக அந்தப் போராட்டக்காரர்களை அங்கிருந்து கலைத்து விடலாம் என்று எண்ணி இருந்தது.

இவ்வாறான முயற்சிகள் தோல்வி அடைந்ததன் பின்னணியிலேயே தற்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்துவதற்குத் தயாராக இருக்கிறேன் என அறிவித்திருக்கின்றார். உண்மையில் இது போராட்டத்தைத் திசை திருப்புவதற்கான முயற்சியாகவே காணப்படுகின்றது.

நாட்டு மக்கள் இன்று கோரி நிற்பதானது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது தலைமையிலான அரசு பதவி விலகிச் செல்ல வேண்டும் என்பது மாத்திரமேயாகும்.

போராட்டத்தின் தொனிப்பொருளை உணர்ந்துகொள்ளாது பேச்சுக்கு தயார் என்பது போராட்டத்தைத் திசை திருப்புவதாகவே அமையும் - என்றார்.

## கோட்டாபய அரசுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினமான நேற்று நுவரெலியாவில் புத்தாண்டுக் கொண்டாட்டத்துடன் பொதுமக்களால் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

'எங்கள் புத்தாண்டு நடு வீதியில்' எனும் தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் இளைஞர்கள், யுவதிகள், பெரியோர், சிறியோர், அரசியல்வாதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வரிசை வாழ்க்கையை நிறுத்து, பிச்சை எடுக்கும் நிலை வேண்டாம், மக்கள் வாழ்வாதாரத்தில் கை வைக்காதே என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

அத்தோடு, தலைகளில் கறுப்புப் பட்டிகளை அணிந்திருந்ததோடு, கோஷங்களையும் எழுப்பியிருந்தனர். பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா அமைப்பாளர் தினேஷ் ஆகியோர் கலந்துகொண்டு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

## மக்கள் திரண்டு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றப் பிரேரணையை முன்வைத்து நிறைவேற்றிக்கொள்ளும் நடைமுறை என்பது சவாலுக்குரிய விடயமாகும். எனவேதான், புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் இடைக்கால அரசொன்றை அமைத்து, நாட்டில் அரசியல் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம். அதற்குப் பிரதமர் பதவி விலக வேண்டும். புதிய பிரதமர் தலைமையில் நாட்டு மக்கள் ஏற்கும் அரசு அமைய வேண்டும்.

இந்த நோக்கில்தான் 11 கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினர். அடுத்த சுற்றுப் பேச்சு நடத்தப்படுவதற்குள் எமது அணியில் உள்ள உறுப்பினரை விலைக்கு வாங்கி விட்டனர். இந்தச் சில்லறைத்தனமான அரசியலை பஸில் ராஜபக்ஷ தனது சகாக்கள் ஊடாக ஆரம்பித்துள்ளார். ராஜபக்ஷக்களின் இந்தச் சூழ்ச்சி கதவு விளையாட்டு எடுபடாது. உறுப்பினர்களை விலைக்கு வாங்கி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முடியாது.

எனவே, சாந்த பண்டாரவுக்கு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சுப் பதவியை ஜனாதிபதி உடன் பறித்து, அவரை அரசியல் ரீதியில் அநாதையாக்க வேண்டும். அதனைச் செய்தால் நாளை வேண்டுமானாலும் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தத் தயார். ஆனால் தொடர்ந்து அடம்பிடித்துக்கொண்டிருந்தால் மாற்று நடவடிக்கையில் இறங்குவோம் -

## கோட்டா அரசுக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடவிருந்தது. அன்றைய தினம் இப்பிரேரணை கையளிக்கப்படும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் 18ஆம் திகதி அரசு பேச்சு நடத்தவுள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்தால் அரசியல் ஸ்திரமற்ற நிலை என்பதைக் காரணம் காட்டி அந்தப் பேச்சு வெற்றியளிக்காமல் போகலாம். எனவே, நாட்டு நலனைக் கருதி, பிரேரணையை முன்வைப்பதைப் பிற்போட எதிரணி உத்தேசித்துள்ளது.

## 24 மணி நேரத்தில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் உயிரிழந்துள்ளார். விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான நபர் கொடகவெல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின்னர் உயிரிழந்துள்ளார். லொறியின் சாரதி கவனக்குறைவாக வாகனத்தைச் செலுத்திய குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை ஹொரணை - தல்கஹவில வீதியில் மோட்டார் சைக்கிளைக் கட்டுப்படுத்த முடியாமல் பத்தரமுல்லைச் சேர்ந்த 61 வயதுடைய ஒருவர் சறுக்கி கீழே விழுந்து விபத்தில் உயிரிழந்துள்ளார். குறித்த நபர் பலத்த காயங்களுடன் ஹொரண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - கண்டி வீதியில் பங்களாவத்தை பகுதியில் நேற்று மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதி விளக்கின் மீது மோதி கடவத்தையில் வசிக்கும் 40 வயதுடைய ஒருவரும் உயிரிழந்துள்ளார். ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளார்.

வெல்லவ பொலிஸ் பிரிவில் லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 24 வயதுடைய இளைஞர் உயிரிழந்துள்ளார். விபத்தின்போது பெண் ஒருவரும் குழந்தையும் பயணித்த ஓட்டோ மீது லொறி மோதியுள்ளது. ஓட்டோவின் சாரதியான 24 வயதுடைய இளைஞர் உயிரிழந்துள்ளமையுடன் பெண் மற்றும் குழந்தை படுகாயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்தனகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 34 வயதுடைய நபர் ஒருவர் தனது கட்டுப்பாட்டை இழந்து வீதி விளக்கின் மீது மோதியதில் உயிரிழந்துள்ளார். விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான நபர் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின்னர் உயிரிழந்துள்ளார்.

தம்புத்தேகம பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 13 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார். இரண்டு குழந்தைகளுடன் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் பாதசாரி கடவைக்கு அருகில் கார் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. படுகாயமடைந்த நபரும் இரண்டு குழந்தைகளும் தம்புத்தேகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார். சைக்கிளில் பயணித்தவரும் அவரது மற்றைய 14 வயது குழந்தையும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மெல்சிறிபுர பகுதியில் டிப்பர் ரக வாகனமும் லொறியும் நேருக்கு நேர் மோதியதில் 38 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவத்தின்போது லொறியின் சாரதி இரண்டு குழந்தைகளுடன் பயணித்துள்ளார். காயமடைந்த மூவரும் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், லொறியின் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஜனாதிபதியைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கியுள்ளார். இன்று காலை காலிமுகத்திடலுக்கு வந்த அவர், இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு, போராட்டத்தைத் தொடர்கின்றார். 24 மணிநேரம் தனது போராட்டம் தொடரும் எனவும் அவர் அறிவிப்பு விடுத்துள்ளார்.

## காலிமுகத்திடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தோலிக்க சபையும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இளைஞர்களின் பின்னணியில் இருக்கின்றது எனவும், இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் எதுவித மதம் சார்ந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க போவதில்லை என்றும் வணபிதா சிறில் காமினி தெரிவித்துள்ளார். அதேவேளை , உயிர்த்த ஞாயிறு மத அனுட்டானங்களை காலி முகத்திடல் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இடத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது என சமூக வலைத்தளங்களில் வெளிவந்த செய்திகளை கத்தோலிக்க சபை நிராகரித்துள்ளது.

## கோட்டா மௌனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மௌனம் கலைய வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இருப்பினும், இப்போது கோபத்துக்கான நேரம் மட்டுமல்ல, தீர்வுக்கான நேரம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். வெளிநாட்டு ஊடகமொன்று வழங்கிய செவ்வியின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியும் அரசும் நாட்டுக்கான திட்டங்கள் குறித்து இன்னும் வெளிப்படையாகக் குரல் கொடுத்திருக்க வேண்டும். அத்தோடு, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் அதைச் சமாளிப்பதற்கான அவரது திட்டங்கள் குறித்து விளக்கமளித்திருக்க வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அரசு தேவையான அளவுக்கு வெளிப்படைத் தன்மையுடன் இருக்கவில்லை என்பதையும், ஜனாதிபதியின் மௌனம் தற்போதைய நிலைமைக்கு உதவவில்லை என்பதையும் ஏற்றுக்கொள் கின்றேன்.

எனவே, ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றி தனது திட்டங்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவது அவர்களின் உரிமை என்றாலும் அத்தகைய கோபம் பயனற்றது. அது நெருக்கடியை மேலும் உருவாக்கக்கூடும் - என்றார்.

## லிட்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தனது இராஜிநாமாக் கடிதத்தை அவர் அனுப்பிவைத்துள்ளார்.

சித்திரைப் புதுவருட தினத்தில் நம் நாட்டு மக்கள் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நின்ற போதும் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் பதவி விலகியுள்ளார் என தெசேரா ஜெயசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.




காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நம்மைத் தகவமைப்போம்!

அவசர காலங்கள், நெருக்கடிகளுக்கு ஏற்றவாறு சில பழக்கவழக்கங்கள், முறைகளை நாம் கையாள்வது அவசியம்.

மழை காலத்தில் வெளியில் போகும்போது குடை எடுத்துக் கொண்டு செல்வது போல சில விடயங்களை நாம் முன்னெச்சரிக்கையுடன் செய்வது தவிர்க்க முடியாதது.

கொரோனாத் தொற்று வந்த காலத்தில் சில விடயங்களை முன்னெச்சரிக்கையாகக் கையாண்டோம். முகக்கவசம் அணிந்து, ஒன்றுகூடல்களைத் தவிர்த்து, சமூக இடைவெளிகளைத் தவறாது பேணினோம். அடிக்கடி கைகளைத் தொற்று நீக்கி கொண்டு கழுவினோம்.

இப்படி நெருக்கடிகளுக்கு ஏற்றவாறு எம்மை நாமே தகவமைத்துக் கொள்வது மிகக் கட்டாயமாகும்.

இப்போது பொருளாதார நெருக்கடி. அதன் சிக்கல்கள் பல வடிவங்களில் நம்மைத் தாக்கியுள்ளன. எரிபொருள் இல்லை. சமையலுக்கு எரிவாயு இல்லை. அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு, மின்வெட்டு என்று இன்னோரன்ன பிரச்சினைகள்.

அவற்றுள் மிக முக்கியமானது மருந்துத் தட்டுப்பாடு. அதன் பாதிப்பின் ஆழம் சமூகத்தில் இன்னும் முழுமையாக உணரப்படவில்லை என்பதுதான் உண்மை.

நாட்டின் அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மக்களின் இலவச சுகாதார சேவை ஸ்தம்பிக்கும் பேராபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் மோசமான கட்டத்தை கவனத்தில் எடுத்து நாட்டில் சுகாதார அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வழக்கமாக நாட்டின் இது போன்ற விடயங்களில் மெத்தனமாக இருந்து விட்டு, 'குதிரை ஓடிய பின்னர் லயத்தை மூடிய கதையாக' நடந்து கொள்ளும் இந்த ஆட்சிப் பீடம் சுகாதார நிலைமை தொடர்பிலும் அப்படித்தான் நடந்து கொள்ளப் போகின்றது.

அரச வைத்திய நிலையங்களில் கிளினிக்குகளில் விநியோகிக்க மருந்துகள் இல்லை. பல இடங்களில் சத்திர சிகிச்சைகள் கூட நிறுத்தப்படும் அளவுக்கு அதற்கான உபகரணங்கள், மருத்துவக் கருவிகள், மருந்துகள், மூலவளங்களுக்குத் தட்டுப்பாடு.

இந்த நெருக்கடிகளுக்கு அமைய – சுகாதார பிரச்சினைகள் மோசமாக ஏற்படாமல் தவிர்க்க பொது மக்களே தம்மைத் தகவமைத்துக் கொள்வது அவசியமாகும்.

இந்தச் சமயத்தில் – அத்தியாவசிய மருந்துகள் இல்லாத இந்த நெருக்கடியான காலகட்டத்தில் – பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உளநல வைத்தியர் வைத்திய கலாநிதி கதிரமலை உமாசுதன் தெரிவித்த கருத்து முக்கியமானதாகும்.

"இந்த இக்கட்டான நிலையை கடந்து மீள்வதற்கு உள ஆரோக்கியம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை ஒவ்வொருவரும் பேணவேண்டும். மதுபான பாவனை போதைப் பொருள் பாவனையைத் தவிர்த்து, வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்து, விபத்துகள் ஏற்படாதவாறு செயல்படுதல் சிறந்தது.

"இளைஞர்கள் வன்முறையைத் தவிர்த்து, தேவையற்ற பிரச்சினைகளில் ஈடுபடாது இருப்பது ஆரோக்கியமானது. பொதுமக்கள் உணவுப்பழக்கங்களில் கவனம் வைத்து, உள விருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்" – என்று வைத்திய கலாநிதி உமாசுதன் கூறியுள்ள ஆலோசனையை உள்வாங்கிச் செயற்படுவது நமது சமுதாயக் கடமையாகின்றது.

# குற்றங்களுக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

## சுமந்திரன் வேண்டுகோள்



பொருளாதார பின்னடைவு, யுத்தகுற்றம் மற்றும் ஊழலுக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வடமராட்சி காரியாலயத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ராஜபக்ஷ இருட்டு அகன்று போக வேண்டும். ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென மக்கள் இன,மத,மொழி வேறுபாடின்றிக் கோருகின்றனர்.

அந்தவகையில் தற்போது ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்றுவரும் போராட்டத்திற்குத் தார்மீக ஆதரவை வழங்குகிறோம். போராட்டத்தில் அரசியல் கலப்பு வேண்டாமென போராட்டாக்காரர்கள் விரும்புகிறார்கள். வடக்கு, கிழக்கில் பலர் கலந்து கொள்ள வேண்டுமென விரும்புகின்றனர். புத்தாண்டு சமயத்தில் போராட்டம் வெற்றி பெற வேண்டுமென பிரார்த்திக்கிறேன். அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை, ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிரான குற்றப்பிரேரணை, நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைக்கு எதிரான சட்டத்திருத்தம் நிறைவேறினால் நாட்டில் மறுமலர்ச்சி ஏற்படும். – என்றார்.

# தமிழரசாக அல்லாமல் கூட்டமைப்பாக தீர்மானம் எடுப்பதே தமிழருக்கு நல்லது

## சித்தார்த்தன் எம்.பி. அறிவுரை



தமிழரசுக் கட்சியாக முடிவை எடுப்பதை விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து முடிவை எடுப்பதே தமிழ் மக்களுக்கு பயனைத் தருமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் வியாழக்கிழமை கந்தரோடையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர்மேலும்தெரிவிக்கையில்–


தற்போதைய ஆட்சியாளருக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை மற்றும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது தொடர்பில் கையெழுத்திடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நடவடிக்கையில் தமிழ் அரசுக் கட்சி தானாக ஒரு முடிவை எடுப்பதை விட தமிழ் தேசியக் கூட்டமைப்பாக எடுக்கப்போகும் முடிவு பலமானதாக இருக்கும்.

தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் தாமாகவே முன்வந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். மக்கள் போராட்டத்தின் விளைவாக அரசாங்கம் முன்பு இருந்ததைவிட கீழ் இறங்கி முடிவுகளை எடுப்பதற்கு தயாராகி விட்டது.

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற போவதற்கு மனமில்லை என்றாலும் கடந்த காலங்களில் பேசாதவர்கள் தற்போது பேச ஆரம்பித்துவிட்டார்கள். இவ்வாறான நிலையில் வடக்கு மாகாணத்தில் பெரும்பாலான போராட்டங்கள் இடம் பெறாவிட்டாலும் மக்கள் பொருளாதார நெருக்கடியை உணர ஆரம்பித்துத் தாமாகவே போராட்டத்தில் இறங்குவார்கள்.

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திடுவது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதிக்க வேண்டும் என சிலர் கூறுகின்றார்கள். நிபந்தனை விதிப்பதற்கு இது ஏற்ற தருணம் அல்ல. அரசாங்கத்தை மாற்ற வேண்டும் என பெரும்பாலான மக்கள் போராட்டத்தில் இறங்கி உள்ள நிலையில் தமிழ் மக்களுடைய பிரச்சினையை மட்டும் ஏனைய தரப்பினரிடம் கோரிக்கையாக வைக்க முடியாது. – என்றார்.

# எதிர்க்கட்சிகளின் கூட்டுச் செயற்பாட்டை வற்புறுத்துகின்றார் கொழும்பு மேயர் ரோஸி



எதிர்காலத்தில் இலங்கை 700 கோடி டொலர் கடனைச் செலுத்தவேண்டிய காரணத்தால் எமது நாடு மேலும் பாதிக்கப்படுவதை தடுக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும் என கொழும்பு மாநகரசபை மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார். நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியம் குறித்து அவர் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைவதன் மூலமே நாடு எதிர்கொண்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும்.

எதிர்க்கட்சியினர் அனைவரும் பேதங்களை புறந்தள்ளிவிட்டு ஒன்றுபட்டு அணிதிரண்டு தாய்நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அர்ப்பணிக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன இரண்டு கட்சிகள் அல்ல. ஒரே குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்ற சகோதரர்கள் உடைய அரசியல் சக்தியாகும் என்பதை அந்த கட்சிகளின் தலைவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

தூரநோக்கற்ற அரசியல்வாதிகள் நாட்டின் தற்காலத்தை மாத்திரமல்லாது பிறக்காத வருங்கால சந்ததியையும் அவல நிலைக்கு தள்ளிவிட்டுள்ளனர்.

மேலும் உங்களை மக்கள் பிரதிநிதிகளாக நியமித்த மக்களைப் பட்டினியால் மரணிப்பதற்கு இடமளிப்பதா இல்லாவிட்டால் அவர்களுக்காக கூட்டுப்பொறுப்புடன் அர்ப்பணிப்பதா என்ற தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் எடுக்கவேண்டும். – என்றுள்ளது.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# யோகர் சுவாமிகளுடனான ஒரு நேரடி அனுபவம்

## சிவயோக சுவாமிகளின் திவ்யமான வாக்கு அன்பர் ஒருவருக்கு சுவாமிகள் கூறிய ஆசி

பயப்படாதே ஆறுமுகம். பாம்புகள் உலவுதடா. எண்ணத்தை ஈசன் மேல் செலுத்து. போ.... போட்டு வா

அப்போது எனக்கு வயசு பன்னிரெண்டு வரையிருக்கும் என்று நினைக்கின்றேன். சிவயோக சுவாமிகள் நல்லூர் தேரடியிலே தங்கியிருந்துவிட்டு பருத்தித்துறை வீதிவழியாக தனிமையாக நடந்து வந்து, வெயிலுகந்த பிள்ளையார் கோவிலடியில் சற்று நேரந் தங்கி நின்று விட்டு,பின்னர் யாழ் நாயன்மார்கட்டுத் தாமரைக் குளத்துப் பக்கம் நடந்து வருவார்.

சுவாமிகள் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாள் கோவில் வளாகப் பக்கமாகத் தினமும் காலை 7.00மணி வரையிலே வந்து சிறு பொழுது தங்கியிருந்து விட்டு, செம்மணி வீதி வழியாக அரியாலை நாவலடி வைரவர் கோவிலுக்குச் சென்றுவிட்டு, அங்கு சிறிது நேரம் தங்கியிருந்து, பின் முற்பகல் 10.00 மணிக்கு முன்பு செம்மணி வீதி வழியாகத் திரும்பி வருவது வழக்கம்.

சுவாமிகளது வரவின் போது அவருக்குப் பின்னால் ஒரு சிறு அடியார் கூட்டம் சுவாமிகளின் அருள்வாக்குக் கேட்க வருவது வழக்கமாகும். அதில் நானுமொருவன். சுவாமிகளைத் தரிசிக்க வேண்டும் என்ற பேரவாவுடன் வரும் அடியவர்களுக்கு அருட்கண் பார்வையினால் ஆசி வழங்கி அருளுரை கூறிவிட்டு சுவாமிகள் தான் செல்ல வேண்டிய பயணத்தைத் தொடர்வார். மேலும் அடியவர்கள் அவரைப் பின்தொடர்ந்து சென்றால் போ. திரும்பிப் போ. போய் ஆண்டவனை வணங்கு என்று கூறாமற் கூறிச் செல்வார் என்று அடியவர்கள் கூறுவதைக் கேள்விப்பட்டுள்ளேன்.

சுவாமிகளைத் தரிசிக்கவென அடியவர்கள் நல்லூர் தேரடிக்கும், அவர் தங்கியிருந்த சிவதொண்டன் நிலையத்துக்கும், ஞானநிட்டையிலிருந்து தவம் செய்த அரியாலை துண்டி எனும் பதிக்கும் படையெடுப்பது வழக்கம்.

யாழ்.அரியாலையைச் சேர்ந்த ஆறுமுகம் என்ற முதியவர் ஒருவர் சுவாமிகளை தரிசிக்க வேண்டுமென நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலயத்துக்கு அவர் வரும் செய்தி அறிந்து அங்கு வந்து காத்திருந்தார். சிறிது நேரத்தில் சுவாமிகள் அங்கு வந்து அங்கிருந்த மக்களைப் பார்த்துக் கையசைத்து விட்டு செம்மணி வீதி நோக்கிச் செல்லலானார். அடியவர்க்கு அருள் வாக்கு எதுவும் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம். முதியவர் ஆறுமுகம் அவர்களுக்கும் அவ்வாறே. சுவாமிகளைப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார். அன்பரொருவர் பின்தொடர்ந்து வருகிறார் என்பதை உணர்ந்த சுவாமிகள், சற்று நின்று முதியவரைத் திரும்பிப் பார்த்து அப்பு ஆறுமுகம் பயப்படாதே போட்டு வா. உங்கை பாம்புகள் அதிகம் உலவுதடா. கவனம்.

(11ஆம் பக்கம் பார்க்க)





## நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

உய்யவொரு ஞானமளி கைலையுறை ஞானமுனி
ஐய்யரது நெஞ்சமது - அறியாதே
தையலுமை யாளினது கையிலுள மாகனியில்
மையலது கொண்டுஅதை - அடைமாறே
தொய்வதில மாமயிலில் வெய்யவுன வேலினொடு
வையமுழு தும்வலம - துறவேதான்
ஐயமது தீரவுரை செய்யுதவ நாரதனின்
மெய் மொழிகொ டண்ணனவன் - கனிவாங்க
மெய்யிலணி நீறனவன் செய்யுசெய லேமறுகி
மெய்யுடைக ளைந்துபழ - னியைநாடி
துய்யவொரு கோவணமும் மெய்யிலணி மாலையொடு
கையதொரு தண்டுமணி - பழமாயே
நையுதமிழ் பாடிவரு மவ்வையுரை ளோதநனி
மெய்யதையு ணர்ந்துவிடு - முருகோனே!
வெய்யயம னாருயிரை கொய்யவரும் போதருளை
நல்லையது நின்றருளு - பெருமானே!

- கவிஞர் இராசையா குகதாசன் -

## கோளறு பதிகம்

### பாடல் - 09

**பலபல வேடமாகும் பரனாரி பாகன்**
**பசுவேறும் எங்கள் பரமன்**
**சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**மலர்மிசையோன் மால் மறையோடு தேவர்**
**வரு காலமான பலவும்**
**அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே.**

பொழிப்பு :-

வேடனாக, பிட்சாடனராக, யானை உரி போர்த்தவராக, நடராஜராக, முப்புரம் எரித்த முதல்வனாக, காலனை உதைத்த மூர்த்தியாக, தட்ஷணாமூர்த்தியாக எனப் பலப்பல வேடம் போட்ட எம் தலைவனும் உமாதேவியைத் தன் இடப்பாகத்திற் கொண்டவரும் தேவலோகப் பசுவான காமதேனு ஒரு சமயம், தன் உடலில் அனைத்துத் தேவர்களும் இருந்தாலும் தாயின்றி இருக்கும் சிவனாரை, தன் உடல் மேற் தாங்க வேண்டும் என்று ஆசை கொண்டதாம், அதன் ஆசையை நிறைவேற்ற ஏறி மெல்ல அமர்ந்து கொள்ள, ஒரு தாய் தன் குழந்தையைச் சுமப்பது போல் மிகுந்த மகிழ்வோடு சுமந்து சென்று தன் ஆசையைத் தீர்த்துக் கொள்ளப் பெருங்கருணை புரிந்த சதாசிவனான பரமசிவனார் (காளையைப் பசுவென்று பாடுவதற்கு ஞானசம்ப்ந்தர் ஒன்றும் மானிடப்பிறவியில்லை. ஏதோ சந்தத்திற்காக எருதைப் பசுவாய் மாற்றவும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். - சித்தர் வாக்கு) பாகீரதி



என்ற கங்கையெனும் மங்கையோடு, எருக்க மலர்களையும் சூடிக்கொண்டு, என் உள்ளத்தின் உள்ளே குடிபுகுந்து அமர்ந்து இருப்பதனால் - மஹா விஷ்ணுவின் பிள்ளையான பிரம்மாவும் அப்பாவான மஹாவிஷ்ணுவும் தர்மம் தவறும்போது வெகுண்டு எழும் வேதமாதாவானவளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் வருகின்ற எதிர்காலங்கள் அனைத்தும், பேரலைகளையுடைய கடலும் பெரிய மலைகளும் பணிந்து நல்லன, நல்லன, மிக அதிகமான நல்லன, நல்லனவே செய்வர்.

**ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்**
**(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து.)**

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# மகாராஷ்டிராவில் பதற்றத்தை அதிகரிக்கும் ஒலிபெருக்கி அரசியல் மாநில அமைதியை சீர்குலைக்க விடமாட்டோம் என அரசு அறிவிப்பு




மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆளும் சிவசேனா கூட்டணி அரசுக்கும் எதிர்க்கட்சியான பா.ஜ.கவுக்கும் இடையே அரசியல் ரீதியாக கடும் மோதல் போக்கு நிலவி வருகிறது.

மசூதிகளில் அதிக சத்தத்தை எழுப்பும் ஒலிபெருக்கிகளை மாநில அரசு அகற்ற வேண்டும் என்று மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா கட்சித் தலைவர் ராஜ் தாக்கரே வலியுறுத்தி இருந்தார். அவற்றை அகற்றாவிட்டால், மசூதிகளுக்கு போட்டியாக இந்துக் கோயில்களில் ஒலிபெருக்கிகள் மூலம் பாடல்கள் ஒலிபரப்பப்படும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில், மகாராஷ்டிரா பா.ஜ.க. தலைவர் மோஹித் கம்போஜ், கோயில்களுக்கு இலவச ஒலிபெருக்கிகளை விநியோகிக்கத் தொடங்கியுள்ளார். முன்னதாக அவர் கோயில் அறக்கட்டளைகளுக்கு எழுதியிருந்த கடிதத்தில், இந்துக்கள் மீது பாகுபாடு காட்டப்படுகிறது என்றும், இந்து மதத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில், அனைத்து கோயில்களிலும் ஒலிபெருக்கிகளை விநியோகிக்க முடிவு செய்துள்ளேன், என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளபடி, சட்டம் ஒழுங்கைப் பாதிக்காத வகையில், பக்திப் பாடல்களை கோயில்களில் ஒலிபரப்ப வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஒலிபெருக்கி அரசியல் அங்கே பரபரப்பை ஏற்படுத்தி உள்ள நிலையில், மகாராஷ்டிராவில் அமைதி மற்றும் இயல்பு நிலையைச் சீர்குலைக்க யாரையும் அனுமதிக்க மாட்டோம், என்று அம்மாநில உள்துறை அமைச்சர் திலீப் வால்ஸ் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்திற்கு பேட்டி அளித்த அவர், அரசு இந்த விடயத்தை தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளோம் எனவும், இயல்பு நிலையை சீர்குலைக்க யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார். இந்தியா அனைத்து மதங்களையும் கொண்ட நாடு, யாரும் பிளவுகளை உருவாக்க முயற்சிக்கக் கூடாது என்றும், இந்தியாவின் ஒற்றுமையை உடைக்க யாரும் முயற்சிக்க வேண்டாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் பண்டிகைக் காலத்தை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது. வகுப்புவாத பதற்றம் ஏற்படாமல் இருக்க அனைத்துப் பகுதிகளிலும் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## நீட் விலக்கு மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்பவேண்டும் மீண்டும் ஆளுநருக்கு கடிதம் அனுப்பினார் ஸ்டாலின்

நீட் விலக்கு மசோதாவை உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் என்று தமிழக ஆளுநர் ஆர்.என். ரவிக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

நீட் மசோதாவை ஜனாதிபதிக்கு ஆளுநர் அனுப்பாதமை வேதனை அளிக்கிறது எனத் தெரிவித்துள்ள மு.க.ஸ்டாலின், நான் நேரில் சந்தித்து வலியுறுத்தியபோது மசோதாவை அனுப்பி வைக்கிறேன் என ஆளுநர் உறுதி அளித்தார். மசோதா பற்றி ஆளுநர் உறுதியான பதிலளிக்காதமையால் அவர்வழங்கியதேநீர்விருந்தில் பங்கேற்பது முறையாக இருக்காது என்பதால் நாம் செல்லவில்லை. ஆளுநருக்கும் மாநில அரசுக்குமான உறவுதொடர்ந்து இணக்கமாகவும் சுமுகமாகவும் இருக்கும் எனவும் முதலமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். மக்கள் நலன், அரசியல் அமைப்புச் சட்டங்களின்படி கடமையைச் செய்யும்போது மக்களும் மாநிலமும் வளம் பெறும், என்றும் முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மொழியை ஆயுதமாக வைத்து தி.மு.க. அரசியல் செய்கிறது பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை குற்றச்சாட்டு



மக்களின் கோபத்திலிருந்து தப்பிக்க தி.மு.க. மொழியை ஆயுதமாக பயன்படுத்தி அரசியல் செய்வதாக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து ஊடகவியலாளர்களுடன் உரையாடிய அண்ணாமலை, மத்திய அமைச்சர் அமித்ஷா கூறியமை தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அவர் எதற்காக அப்படி கூறினார் என்றால், அதிகப்படியாக பேசப்படும் மொழியாக இந்தி இருக்கிறது. எனவே தான் அவர் அப்படி கூறினார். அமித்ஷாவின் தாய்மொழி குஜராத்தி. பிரதமர் மோடியின் தாய்மொழி குஜராத்தி, என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர், மக்களுக்கு தி.மு.க. மீது கோபம் இருக்கிறது. ஊழல் குற்றச்சாட்டுகள் வெளிவருகின்றன என்பதால் தற்காத்துக் கொள்வதற்காக தி.மு.க. மொழியை எடுத்து அரசியல் செய்து வருகிறது, என்றும் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல் மொழி மாநாட்டில் உரையாற்றிய இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஆங்கிலத்திற்கு மாற்றாக இந்தியை அலுவல் மொழியாக ஏற்க வேண்டிய நேரம் வந்து விட்டது. இந்தியாவின் ஒருமைப்பாட்டை இந்தி மொழி அடிப்படையில்தான் ஏற்படுத்த முடியும். மத்திய அமைச்சரவையின் 70 சதவீத நிகழ்ச்சி நிரல்கள் இந்தியில்தான் தயாரிக்கப்பட்டு வருகின்றன, என்று பேசியிருப்பது இந்தி பேசாத மக்களிடையே மிகுந்த கொந்தளிப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வன்முறையில் ஈடுபட்ட பா.ஜ.கவினரை கைது செய்ய திருமாவளவன் வலியுறுத்து



அம்பேத்கர் பிறந்தநாளில் வன்முறையில் ஈடுபட்ட பா.ஜ.கவினரை கைதுசெய்ய வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக திருமாவளவன் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், கோயம்பேடு அம்பேத்கர் சிலையில் நான் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்திவிட்டு, ஊடகங்களுக்குப் பேட்டியளித்துவிட்டு திரும்பினேன். அப்போது அங்கே குழுமியிருந்த பா. ஜ. கவினர் பாரத்மாதாகி ஜே!, என கூச்சலிட்டுக்கொண்டே திடீர் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். வி.சி.க. கொடிகளைப் பிடுங்கி எறிந்துள்ளனர்.

எதிர்ப்புத் தெரிவித்த வி.சி.கவினர் மீது கற்களை வீசித் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். அதில் தமிழ்க்கதிர் என்பவர் உட்பட மூன்று பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். திட்டமிட்டு ரவுடிகளை ஏவி வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டுள்ள சனாதனக் கும்பலான பா.ஜ.கவினரைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன். புரட்சியாளர் அம்பேத்கரின் சமத்துவக் கொள்கைக்கு நேரெதிரான சனாதன கொள்கையைக் கொண்ட பா.ஜ. கவினருக்கு அம்பேத்கரின் சிலைகளுக்கு மாலை அணிவிக்க அருகதை இல்லை. இந்த நாடக அரசியலை மக்களிடம் அம்பலப்படுத்துவோம், என்று குறிப்பிட்டிருக்கிறார்.



## ஹிஜாப் அணிந்து பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கக்கோரி கர்நாடக முதலமைச்சருக்கு முஸ்லிம் மாணவி கோரிக்கை

கர்நாடக மாநிலத்தில் உள்ள உடுப்பி மாவட்டத்தில் உள்ள அரசுக் கல்லூரியில் ஹிஜாப் அணிந்து வரத் தடை விதித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்பிறகு, ஹிஜாப் விவகாரம் தொடர்பாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் போராட்டம் நடைபெற்றது.

இதனையடுத்து பாடசாலைகள், கல்லூரிகளுக்கு மாணவர்கள் சீருடையில் மட்டுமே வர அறிவுறுத்தி கர்நாடக அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது. இதனை எதிர்த்து உடுப்பி அரசு மகளிர் பி.யூ.கல்லூரி முஸ்லிம் மாணவிகள் உள்பட பலர் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்றம், ஹிஜாப் அணிவது இஸ்லாமில் அத்தியாவசியம் கிடையாது எனக்கூறி ஹிஜாப் அணியத் தடை விதித்த உத்தரவை ரத்து செய்ய மறுத்துவிட்டது. இந்த உத்தரவுக்கு எதிராக தற்போது உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையே, கர்நாடகாவில் வரும் 22 ஆம் திகதி பல்கலைக்கழக முன்னோடி பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மைக்கு, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த ஒரு மாணவி டுவிட்டர் மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

அதில், எங்கள் எதிர்காலம் பாழாகாமல் தடுக்க இன்னும் உங்களுக்கு வாய்ப்பு உள்ளது. ஹிஜாப் அணிந்து பரீட்சை எழுத எங்களை அனுமதிக்க வேண்டும். தயவு செய்து இதை பரிசீலியுங்கள். நாங்கள் இந்த நாட்டின் எதிர்காலம், என்று தெரிவித்துள்ளார்.

கர்நாடக அரசு ஹிஜாப் அணிவதற்கு விதித்த தடையை நீக்கும் வரை பரீட்சை எழுதப் போவதில்லை எனவும் அந்த மாணவி கூறியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு








# வன்னி ஹோப் நிறுவனத்தினரால் மேலும் 5 வீடுகள் வழங்கி வைப்பு

## திருமலையில் கையளிப்பு நிகழ்வு

(ஹஸ்பர்)

'வாழ்வதற்கான இல்லம்' செயற்றிட்டத்தின் கீழ் வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மேலும் ஐந்து குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்து அவற்றினை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ், வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர்களான கே.கந்தகுமார மற்றும் வைத்தியர் மாலதி வரன் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த புதனன்று இடம்பெற்றது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, மிக நீண்டகாலம் மண் குடிசைகளில் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வந்த ஐந்து குடும்பங்களுக்கு இந்த நிரந்தர வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டன. திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளாங்குளம் மீள்குடியேற்றக் கிராமத்தில் உள்ள மூன்று குடும்பங்களுக்கும், ஆத்திமோட்டை கிராமத்தில் உள்ள ஒரு குடும்பத்திற்கும், கிண்ணியா பாரதிபுரம் கிராமத்தில் உள்ள மற்றொரு குடும்பத்திற்குமே மேற்படி நிரந்தர வீடுகள் வழங்கி வைக்கப்பட்டன. வன்னி ஹோப் ஆஸ்ரேலியா நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் திருகோண மலை மக்கள் சேவை மன்றத்தினால் 'வாழ்வதற்கான இல்லம்' எனும் செயற்றிட்டத்தின் கீழ், வீடுகள் அற்று மிகவும் கஷ்டத்திற்கு மத்தியில் வாழும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 35 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

# அறநெறிப் பாடசாலைகள் வாகரையில் மீள ஆரம்பம்





(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் இயங்காத நிலையில் காணப்பட்ட அறநெறிப் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வடக்கு, கிழக்கு முன்னேற்றக் கழகத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

இதற்கமைய புச்சாக்கேணி, திருச்செந்தூர் முருகன் அறநெறிப் பாடசாலை மற்றும் பால்சேனை பெரியசாமி அறநெறிப் பாடசாலை ஆகியன வைபவ ரீதியாக சர்வமதக் குருமார்களின் ஆசீர்வாதத்துடன் மீள ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக சிவகுரு ஆதீன முதல்வரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்க இணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள், தென்கயிலை ஆதின முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார், தென்கயிலை ஆதின திருமூலர் தம்பிரான் சுவாமிகள் மற்றும் அருட்தந்தை கே.ஜேசுதாஸ், அருட்தந்தை எஸ்.பிரின்ஸன், வடக்கு – கிழக்கு முன்னேற்றக் கழகத் தலைவர் கு.வி.லவக்குமார், மேற்படி கழகத்தின் வாகரை கிளைத் தலைவர் எஸ்.பாலேந்திரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

# விபத்தில் காயமுற்றவர் உயிரிழப்பு

வாழைச்சேனை பிரதான வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தின் போது படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 8 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து வாழைச்சேனை பிரதான வீதியினை மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்ட போது அதே வீதியில் எதிர்த்திசையில் வந்த கார் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. கொண்டையங்கேணி வாழைச்சேனைபிரதேசத்தைச் சேர்ந்த விநாயகமூர்த்தி ரவீந்திரன் (வயது29) என்பவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.







# பாதிப்புற்ற குடும்பங்களுக்கு உலர் உணவுகள் விநியோகம்

## திருமலையில் 'அகம்' நிறுவனத்தினால்

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள - காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்களுக்கும், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருள்கள் அகம் மனிதாபிமான வள நிலையத்தினால் (AHRC) வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த செவ்வாயன்று திருகோணமலை மாவட்டத்திலுள்ள திருமலை பட்டிணமும் சூழ லும், மூதூர், கிண்ணியா, தம்பலகாமம் மற்றும் சேருவில பிரதேசங்களிலுள்ள மொத்தமாக 150 குடும்பங்களுக்கு திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்துடனும், உரிய பிரதேச சிவில் அமைப்புக்களுடனும் இணைந்து தலா நாலாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# இலங்கையில் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கும் வாய்ப்பு குறைவு என்கிறார் ரணதுங்க



ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் 1984 ஆம் ஆண்டுஅறிமுகம்செய்யப்பட்டுநடைபெற்றுவருகிறது. ஒரு நாள் போட்டித் தொடராக நடைபெற்று வந்த அது தற்போது ரி-20 வடிவத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இறுதியாக 2018 ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ணத் தொடர், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடந்தது. இதில் பங்களாதேஷை வீழ்த்தி இந்தியா சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது.

இதுவரை நடைபெற்றுள்ள 14 ஆசியக் கிண்ணத் தொடர்களில் இந்தியா 7 முறை சம்பியன் பட்டம் பெற்றுள்ளது. இலங்கை 5 தடவையும், பாகிஸ்தான் 2 முறையும் ஆசியக் கிண்ணத்தை வென்றுள்ளன.

15 ஆவது ஆசியக் கிண்ணத் தொடர் இலங்கையில் இந்த வருடம் ஓகஸ்ட் 17 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 11 வரை நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்தது. இதில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகியவையும் தகுதிச் சுற்றில் வெற்றிபெறும் ஓர் அணியும் பங்கேற்கவுள்ளன.

இந்த நிலையில் இலங்கையில் பொருளாதார நெருக்கடி இருப்பதால் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இங்கு நடைபெற வாய்ப்பில்லை முன்னாள் அணித்தலைவரும் அரசியல்வாதியுமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடர் நடைபெறுமா? என்பதை உறுதியாகக் கூறமுடியாது. இலங்கை மற்ற நாடுகளை நம்பியிருக்க வேண்டியுள்ளது. மக்களின் போராட்டம் இலங்கை அரசுக்கு எதிராக, நெருக்கடி தருவதாக உள்ளது. கிரிக்கெட்டுக்கு எதிராக அவர்களது மனநிலை இல்லை. ஆனால், இலங்கையின் தற்போதைய நிலையில் தொடரை நடத்துவது சாத்தியமாகாது. ஆசிய கிரிக்கெட் சபையே இலங்கையில் இருந்து இந்தத் தொடரை மாற்ற முடிவு செய்யலாம், என்று அர்ஜுன ரணதுங்க கூறியுள்ளார்.



# ஐ.பி.எல்.புள்ளிப் பட்டியல் குஜராத் அணி முதல் இடத்தில்!

15 ஆவது சீசன் ஐ.பி.எல். இந்தியாவில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற போட்டியில் ஹார்திக் பாண்டியா தலைமையிலான குஜராத் டைட்டன்ஸ் அணியும், சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதியிருந்தன. இந்த ஆட்டத்தில் 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியால் குஜராத் அணி 4 வெற்றிகளுடன் புள்ளிப் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது . கொல்கத்தா அணி இரண்டாவது இடத்திலும், ராஜஸ்தான் அணி மூன்றாவது, பஞ்சாப் அணி நான்காவது இடங்களிலும் உள்ளன.



ஒலிம்பிக்கில் 11 பதக்கம் வென்ற அமெரிக்க வீராங்கனை

# அலிசன் பெலிக்ஸ் ஓய்வு பெறுகிறார்

அமெரிக்காவின் முன்னணி ஓட்டப்பந்தய வீராங்கனைகளில் ஒருவரான அலிசன் பெலிக்ஸ் இந்த ஆண்டுடன் ஓய்வு பெறுகிறேன் என அறிவித்துள்ளார். 36 வயதான அலிசன் பெலிக்ஸ் ஒலிம்பிக்கில் 7 தங்கம் உள்பட 11 பதக்கங்களும், உலக தடகள சம்பியன்ஷிப்பில் 13 தங்கப்பதக்கங்களையும் வென்ற சாதனையாளர் ஆவார்.

ஒலிம்பிக் தடகளத்தில் அதிக பதக்கம் வென்ற வீராங்கனை என்ற சிறப்பைபெற்ற அலிசன் பெலிக்ஸ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், 'சிறு வயதில் எனது கால், கோழிக் கால்கள் போன்று இருக்கின்றன என கிண்டலடிப்பார்கள்.அதனால், தடகளத்தில் இந்த அளவுக்கு சாதிப்பேன் என்று நான் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை.

எனது வாழ்க்கை முறையை மாற்றிய இந்த விளையாட்டுக்கு நான் நன்றி கடன்பட்டுள்ளேன். இந்த சீசனுடன் விளையாட்டில் இருந்து விடைபெறுகிறேன். எனக்கு ஆதரவாக இருந்த அனைவருக்கும் நன்றி" என்று கூறியுள்ளார்.

2018 ஆம் ஆண்டில் பெலிக்சுக்கு பெண் குழந்தை பிறந்தது. அதன்பிறகு மீண்டும் களம் திரும்பிய அவர் 2019 ஆம் ஆண்டு உலக தடகளப் போட்டிகளில் தொடர் ஓட்டத்தில் 2 தங்கப் பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

# மொண்டி–கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் காலிறுதியில் சிட்சிபாஸ்

மொண்டி - கார்லோ மாஸ்டர்ஸ் ஆடவர் டென்னிஸ் போட்டித் தொடரில் கிரீஸின் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ், அமெரிக்காவின் டெய்லர் ப்ரிட்ஸ் ஆகியோர் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறினர்.

போட்டித்தரவரிசையில் மூன்றாவது இடத்திலிருக்கும் சிட்சிபாஸ் 7-5, 7-6 (7-1) என்ற செட்களில் செர்பியாவின் லாஸ்லோ டெரெவை வீழ்த்தினார். பத்தாவது இடத்திலிருக்கும் பிரிட்ஸ் 7-6 (7-4), 7-5 என்ற செட்களில் சக அமெரிக்கரான செபஸ்டியன் கோர்டாவை தோற்கடித்தார்.

பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவ் 6-3, 7-5 என்ற செட்களில், போட்டித் தரவரிசையில் நான்காம் இடத்திலிருந்த நோர்வே வீரர் கஸ்பர் ரூடை வென்றார். பன்னிரண்டாவது இடத்திலிருக்கும் ஆர்ஜென்டினாவின் டியேகோ ஷ்வார்ட்ஸ்மேன் 2-6, 6-4, 6-3 என்ற செட்களில் இத்தாலியின் லோரென்ஸா செட்டியை வீழ்த்தினார். ஸ்பெயினின் அலெக்ஸாண்ட்ரோ டேவிடோவிச் பாகினோ 6-4, 6-1 என்ற நேர் செட்களில் பெல்ஜியத்தின் டேவிட் கொபினை தோற்கடித்தார்.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# கச்சதீவை மீட்பதுதான் பிரதான குறிக்கோளாம்



## தமிழக அரசு தெரிவிப்பு

கச்சதீவை மீட்பதுதான் முதன்மையான குறிக்கோள் எனத் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தமிழக அரசின் கொள்கை விளக்க குறிப்பேட்டில், தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடல் பகுதியில் மீன்பிடிக்கும்போது சர்வதேச கடல் எல்லையை கடக்கின்றனர் எனக் கூறி இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைதுசெய்யப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் மீன்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அரசால் கைப்பற்றப்பட்ட 88 படகுகளையும், கைதுசெய்யப்பட்ட 23மீனவர்களையும்மீட்கஅனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைப்பற்றப்பட்டு மீட்க இயலாத நிலையில் உள்ள படகுகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தமிழக அரசின் விளக்க குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முன்னர் ஒரு போதுமே இல்லாத பெரும் அராஜக நிலைக்குள் நாடு

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா விசனம்

நாடு முன்னொரு போதும் இல்லாத பெரும் அராஜக நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்திற்குப் பின்னர் நாட்டின் அனைத்து குடிமக்களும், அனைத்து வேறுபாடுகளையும் புறக்கணித்து, மழையையும் பொருட்படுத்தாமல், நாட்டின் முன்னேற்றத்திற்காக அமைதியான போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது முகநூல் பக்கத்தில் பதிவொன்றையும் அவர் இட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

அராஜக நிலைக்குள் நாடு தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில் என்னால் எப்படி புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்க முடியும்?

அத்துடன் இந்தப் போராட்டம் மூலம் வன்முறைக்குப் பதிலாக அமைதியையும், வெறுப்புக்குப் பதிலாக அன்பையும் பார்க்கலாம். அந்தப் போக்கின் மூலம் நாடு நல்ல வெற்றியைப் பெற முடியும். நாட்டின் எதிர்காலத்திற்காகத் தங்கள் இன் னுயிரை அர்ப்பணித்த குடிமக்கள் அனைவருக்கும், இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும், வளமும், ஆரோக்கியமும் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் வளம் மிக்க புத்தாண்டாக அமையட்டும். இந்த நெருக்கடியை சமாளித்து அமைதி, சகவாழ்வு மற்றும் ஜனநாயகம் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். - என குறிப்பிட்டுள்ளார்.

# மாறி மாறி வந்த அரசுகளின் தவறுகளே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்

## கஜதீபன் விளக்குகின்றார்

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் தவறுகளே இன்றைய பொருளாதார நெருக்கடி சூழலுக்குக் காரணமென முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் வியாழக்கிழமை கந்தரோடையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மற்றொருதேசியஇனத்தின்மீதானஒடுக்குமுறையும், அதற்காக செலவழிக்கப்பட்ட நிதி எல்லாம் இணைந்த அரசாங்கத்தின் மிக மோசமான செயற்பாடுகள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நெருக்கடியை தமிழ் தேசிய இனம் நீண்டகாலமாகவே சந்தித்துள்ளதுடன் அதிலிருந்து மீண்டும் வந்துள்ளனர். நாட்டில் இருக்கக்கூடிய அரசுத் தலைவர்கள் பதவி விலக வேண்டும் என்று நாட்டு மக்கள் அனைவரும் வீதியில் இறங்கி போராடுகின்றனர்.

அப்படி இல்லாது போனால் இந்த போராட்டம் நீர்த்து போவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருக்கும். சர்வதேச நாணய நிதியம் மூலமாக நாடு பொருளாதார நெருக்கடியான சூழலில் இருந்து



மீண்டாலும் பக்க விளைவுகளை நாட்டு மக்கள் சந்திக்க வேண்டியவர்களாக இருப்பர். வரி அதிகரிப்பு,பொருள் விலை அதிகரிப்பு, அரசு ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல், நட்டத்தில் இயங்கும் அரசு நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படல் போன்ற நிலைமைகள் உருவாகும், நெருக்கடி ஏற்படும். - என்றார்.

# கைதடியில் வருடப் பிறப்பன்று மின்சாரம் தாக்கிப் பெண் சாவு

கைதடி வடக்கு பகுதியில் மின்சாரம் தாக்கி குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுவருட தினமான நேற்றுக் காலை வீட்டில் உள்ளவர்கள் ஆலயத்திற்குச் சென்ற பின்னர் இந்தப் பெண் தொலைக்காட்சி பெட்டியை இயக்க முற்பட்ட வேளையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்திருக்கிறார் எனக் கூறப்படுகின்றது. கைதடி வடக்குப் பகுதியைச் சேர்ந்த 59 வயதான பரமேஸ்வரி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். இதேவேளை, மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# றம்பொடை நீர்வீழ்ச்சியில் அடித்துச்செல்லப்பட்ட மற்றைய யுவதி, இளைஞனின் சடலங்களும் மீட்பு

வவுனியாவிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்ற வேளை, நுவரெலியா - கொத்மலை, றம்பொடை நீர்வீழ்ச்சியில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல் போயிருந்த மற்றைய இருவரின் சடலங்களும் நேற்று வருடப் பிறப்பன்று மதியம் மீட்கப்பட்டன எனக் கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

றம்பொடை நீர்வீழ்ச்சியில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்த மூவரில் யுவதி ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்தது.

இருவரின் சடலங்களும் மீட்கப்படாத நிலையில் நேற்றுமுன்தினம் பெய்த மழை மற்றும் நீர்வீழ்ச்சியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக தேடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

நேற்றைய தினம் மூன்றாவது நாளாகவும் காலை ஆரம்பிக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது மதியம் யுவதி மற்றும் இளைஞனின் சடலங்கள் மீட்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்டவர்கள் வவுனியா நெடுங்கேணியைச் சேர்ந்த புவனேஸ்வரன் வினோதனி (வயது - 18), வவுனியாவைச் சேர்ந்த விதுசான் (வயது - 21) எனத் தெரியவந்துள்ளது.

கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து முன்னெடுத்த தேடுதலின் போதே இவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவர்களின் சடலங்கள் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மின் உற்பத்திக்காக நீரை வழங்கும் நீர் தாங்கியிலிருந்தே மீட்கப்பட்டன என கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் மீதான மரண விசாரணைகளின் பின் பிரேத பரிசோதனைக்காக கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனைகளின் பின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் இளைஞர், யுவதிகள் 48 பேர் பஸ் ஒன்றில், புத்தாண்டை முன்னிட்டு, நுவரெலியாவுக்கு கடந்த 12 ஆம் திகதி அன்று சுற்றுலாப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு சுற்றுலா செல்லும் வழியில், நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட பகுதியான இறம்பொடையில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் பஸ்ஸை நிறுத்திவிட்டு, நீர்வீழ்ச்சியையும், அதனைச் சூழவுள்ள இயற்கை பகுதிகளையும் பார்வையிடுவதற்கு இளைஞர், யுவதிகள் குழுக்களாக பிரிந்து சென்றுள்ளனர். இதில் ஆறு யுவதிகளும், ஒரு இளைஞனுமாக 7 பேர் கொண்ட குழுவினர் றம்பொடை நீர்வீழ்ச்சி அமைந்துள்ள ஆற்றுப்பகுதியில்நீராடச்சென்றுள்ளனர். எனினும், அவர்களின் சந்தோசம் நீடிக்கவில்லை. திடீரென நீர்வீழ்ச்சி - ஆற்றுப் பகுதியில் நீர்மட்டம் அதிகரித்ததால் அவர்கள் நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள் கூக்குரல் எழுப்ப, அப்பகுதியில் இருந்து சிலர் வந்துள்ளனர். அதற்குள் 4 யுவதிகளை அவர்களுடன் சென்ற இளைஞர் காப்பாற்றி கரைசேர்த்துள்ளார்.

ஏனைய இரு யுவதிகளையும் இளைஞனையும் காப்பாற்ற முற்பட்டவேளையிலேயே மூவரும் நீரில் அடித்துச்செல்லப்பட்டனர்.

இந்த நிலையில் இவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். வவுனியா நெடுங்கேணியைச் சேர்ந்த புவனேஸ்வரன் வினோதனி (வயது - 18), வவுனியா, கல்மடு - ஈஸ்வரிபுரம் பகுதியைச் சேர்ந்த பொன்னுதுரை மதுசாலினி (வயது- 21) ஆகிய இரு யுவதிகளும், வவுனியாவை சேர்ந்த விதுசான் (வயது - 21) ஆகிய இளைஞனுமே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

# நழுவ விடலாமா?

## அக்கரை அக்கறை அலசல்



**என்.சத்தியமூர்த்தி**

ராஜபக்ஷ அரச தலைமைக்கு எதிராக யாழ் பல்கலைக்கழகத்தின் பெரும்பான்மை தமிழ் மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் தாங்களும் கலந்து கொள்ள விரும்புகிறார்கள் என சில சிங்கள மாணவர்கள் கூறினர் எனச் செய்தி வெளியாகி இருந்தது. இதனைத் தொடர்ந்து, தமிழர் பகுதிகளான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், அனைத்து சமூக மாணவர்களையும், இளைஞர்களையும் ஒன்றிணைத்து, எதிர்காலத்தில் ஒன்றுபட்ட நாட்டை உருவாக்குவதற்கு, தற்போது யாழ் மாணவர்களுக்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதனை அவர்கள் நழுவ விடாமல், எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப்போகிறார்கள் என்ற விடயத்தில் கூட இனப்பிரச்சினையின் எதிர்காலம் தொக்கி இருக்கிறது.

கடந்த தசாப்தங்களில், இனப்பிரச்சினை காரணமாக, தமிழர் பகுதிகளில் வாழ்ந்து வந்த சிங்கள இன மக்கள், துரத்தி அடிக்கப்பட்டமை இன்றும் ஓர் இழுக்கே. அதன் ஒரு பகுதியாக யாழ் பல்கலையில் பயின்ற சிங்கள மாணவர்களும் வெளியேற்றப்பட்டமை இன்றைய தலைமுறையினருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், ஒரு சிலராவது இது குறித்த தகவல்களை கேட்டறிந்து இருப்பார்கள் என்று கருத இடமிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் இயக்கம், வடக்கு மாகாண முஸ்லிம் மக்களையும் கட்டாயமாக வெளியேற்றியது வருத்தப்பட வேண்டிய விடயம். ஆனால், இன்று வரை, தமிழ் அரசியல் மற்றும் சமூகத் தரப்பில் இருந்து, அதற்காக முஸ்லிம் சமூகத்திடம் யாரும் மன்னிப்புக் கோரவில்லை என்பது வெட்கப்பட வேண்டிய விடயமும் கூட. அதே சமயத்தில், சிங்கள அரசின் ‘இன ஒழிப்பு’ என்று தமிழர் தரப்பு குற்றம் சாட்டுவது வியப்பாகவே இருக்கிறது.

இவை அனைத்தும் கடந்த கால நிகழ்வுகள். கடந்தவை கடந்தவையாகவே இருக்கட்டும். தற்போதைய சூழலில், நாடு முழுவதும் இளைஞர்கள் ஒன்று திரண்டு ஒரு போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் வேளையில், அதில் தமிழ் இளைஞர்களும் பங்கு பெறுவார்களேயானால், அதனை ஒட்டி நடைபெறும் ஊடாட்டங்கள் மூலமாக, பல்வேறு தரப்பினரிடையே நிலவி வரும் சந்தேகங்களையும் பயத்தையும் பேசி, பகிர்ந்து, தீர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படலாம். இது, ஒரு நாள், இரு நாள் திட்டமல்ல. எவ்வாறு, இனப்பிரச்சினை தசாப்தங்களும், தலைமுறைகளும் சந்தித்த பிரச்சினையோ, அதன் ஆழ்ந்த தீர்வுகளுக்கும் ஒரு சில ஆண்டுகளோ, அல்லது ஒரு தசாப்தமோ கூட தேவைப்படும். தற்போதைய சமூக ஊடக தலைமுறையினர் இதனை எளிதாக்கலாம். வேகமாக முன்னெடுத்து செல்லலாம்.

### தலைமை இல்லாத போராட்டம்

தற்போதைய ராஜபக்ஷ அரசை எதிர்த்து, கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் பேசிய தமிழ் உறுப்பினர்கள், திரும்பி, திரும்பி ஒரு விடயத்தை வலியுறுத்தினார்கள். அது அவர்களது தலைமுறை சார்ந்தது. இனப்போருக்காக வெளிநாடுகளில் ஆயுதங்கள் வாங்கியதில்தான், நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது என்று ஒருவர் கூறினால், தற்போதைய போராட்டம் மூலம், சிங்கள - பௌத்த மக்களும் ஆளும் ராஜபக்ஷ ஆட்சியின் கொடுமையை இப்போதாவது அனுபவிக்கிறார்கள், என்று வேறொருவர் கூறினார்.

அதாவது, இனப்போர் காலகட்டத்தில், அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மருந்துகள் இல்லாமல் தமிழ் மக்கள் பல வருடங்கள் தொடர்ந்து அவதிப்பட்டார்கள். அதில் ஒரு பகுதியை, ஒரு சில மாதங்களாக தற்போது, சிங்கள மக்களும் எதிர்நோக்கி வருகிறார்கள். தற்போதைய பிரச்சினைகளை தமிழ் மக்களும்தான் சந்தித்து வருகிறார்கள். ஆனால், தனக்கு இரண்டு கண்களும் போனாலும், அடுத்தவனுக்கு ஒரு கண்ணாவது போகிறதே, என்ற மனப்பான்மை இன்னமும் தமிழ் இனத்தை விட்டு போய் விடவில்லை என்பதையே இது குறிக்கிறது.

என்றாலும், நாடாளுமன்றத்தில் பேசிய தமிழ் உறுப்பினர்கள், இந்த அரசு வெளியேற வேண்டும் என்பதில் ஒன்றாக இருந்தார்கள். அதை விட முக்கியமாக, அரச தலைமைக்கான மக்கள் போராட்டத்தில், ஜாதி, மதம், இனம், மொழி ஆகிய அனைத்திற்கும் அப்பால் சென்று ஒற்றுமையாக செயல்படுகிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இந்தப் போராட்டத்தை பொறுத்தவரை, ஆட்சி செய்யும் ராஜபக்ஷ குடும்பம் அரசில் இருந்தும், ஏன், அரசியலில் இருந்தும் உடனடியாக வெளியேற வேண்டும் என்ற ஒற்றுமைக் குரல் முகியமான விடயம். அது போன்றே, நாடெங்கிலும் ஆங்காங்கே தொடர்ந்து அரங்கேறி வரும் இந்தப் போராட்டத்திற்கு தலைமை என்று யாரும் முன்னிலை வகிக்கவும் இல்லை. அல்லது, தங்களை தாங்களே முன்னிறுத்திக் கொள்ளவும் இல்லை.

அது போன்றே, இன்று வரை, மக்களுக்கு ஆதரவாக பேசி, அரசை வெளியேற்ற அரசியல் மற்றும் அரசியல் யாப்பு வழிகளில் முன்னெடுக்கும் கட்சித் தலைமைகளும், இந்த மக்கள் போராட்டத்தை தமதாக்கிக் கொள்ளவில்லை. சம கால தேசிய அரசியலில், இது மிக பெரிய விடயம். சாதாரண மக்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி. அதிலும் குறிப்பாக, நகர் புறங்களைச் சார்ந்த நடுத்தர வர்க்கத்தினரின் வெற்றி. காரணம், கடந்த காலங்களில், அவர்கள் வழமையாக, வீடுகளிலும், கிளப்களிலும் பேசி, வெதும்பும் விடயங்கள் குறித்து நடுத் தெருவிற்கு வந்து, போராட்டம் நடத்துகிறார்கள்.

இந்தப் போராட்டங்களில், குடும்பம் குடும்பமாக, சிறு குழந்தைகளுடனும் கூட தொடர்ந்து பங்கு பெறுகிறார்கள். தலைநகர் கொழும்பு போன்ற இடங்களில், பெரு மழையையும், பெரு வெள்ளத்தையும் கூட யாரும் பொருட்படுத்துவதில்லை. இது போன்ற போராட்டங்கள், இலங்கை மக்கள் வசிக்கும் வெளிநாடுகளிலும் கூட நடைபெறுகின்றன. அங்கெல்லாம், அனைத்து இனத்தவரும் சேர்ந்து நிற்கிறார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஜல்லிக்கட்டு போராட்டம்

தமிழ் பேசும் மக்களுக்கு, இந்தப் போராட்டம், தமிழ் நாட்டில், கடந்த 2017 ஆம் ஆண்டு பொங்கல் விழா காலத்தில் நடந்தேறிய ஜல்லிக்கட்டு போராட்டத்தை நினைவூட்டினால், அதில் வியப்பு ஏதும் இல்லை. காரணம், அண்மைக் காலங்களில், அரசியல்வாதிகளின் பங்களிப்பு மற்றும் தலைமை இல்லாமல், தெற்கு ஆசியாவில் அரங்கேறிய முதல் மக்கள் சார்ந்த மாபெரும் போராட்டம் அதுவே.

ஜல்லிகட்டு போராட்டமும் ஒற்றைப் பிரச்சினை குறித்த விடயமல்ல. ஒரு தலைமுறையின் ஆதங்கம் மற்றும் இயலாமையின் வெளிப்பாடு. அறுபதுகளில் ‘இந்தி எதிர்ப்பு’ போராட்டமும் அந்த வகையில் சேர்ந்ததே. அதில், பல்வேறு காலகட்டங்களில், அரங்கேறிய அரசு சார்ந்த பற்பல பிரச்சினைகளும் உள்ளடங்கி இருந்தன.

படித்து, குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் வேலைபார்த்து வந்த இளைஞர்களே ஜல்லிக்கட்டு போராட்டத்தை முன்னெடுத்தவர்கள். சமூக ஊடகங்கள் மூலம், முகம் இல்லாத இளைஞர்கள் அனுப்பிய துண்டுச் செய்திகளுக்கு செவிமடுத்து, தமிழ் நாடே, கொதித்து எழுந்து, மாநிலம் தழுவிய போராட்டங்களில் கலந்து கொண்டது. சென்னை மெரினா கடற்கரை பகுதியில் மட்டும் பத்து லட்சம் மக்கள் போராட்டத்தில் பங்கு பெற்றனர் என்று செய்திகள் தெரிவித்தன. இது தவிர, தமிழ் நாடு முழுமைக்கும், ஏன் அகில இந்தியாவும் இந்த அமைதி போராட்டத்தை, தொலைகாட்சி மூலம் நாள் கணக்கில் தொடர்ந்து கண்டு, தங்களது ஆதரவைப் பதிவு செய்தார்கள்.

இளைஞர்களைத் தொடர்ந்து, தமிழ் நாட்டிற்கே உரிய ஜாதி, மத, அரசியல் பிரிவுகளுக்கு அப்பால், அனைத்துத் தரப்பினரும், பல்வேறு இடங்களிலும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். ஆண் - பெண் இருபாலாரும் ஒன்றாகப் போராடி, ஒன்றாக மெரினா கடற்கரைப் பரப்பில் வானமே கூரையாக படுத்து உறங்கினர். அண்டை வீட்டு உரிமையாளர்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள், இயற்கைக் கடன்களைக் கழிக்க வழி செய்து கொடுத்தார்கள்.

முந்தைய தலைமுறையில், இது போன்ற போராட்டங்களில் மாணவர்கள் பங்கெடுத்தால், அவர்களது பெற்றோரும், உறவினர்களும் அவர்களைத் தடுக்க முயற்சிப்பார்கள்.

ஆனால், ஜல்லிக்கட்டு போராட்டத்தின் போது, மாணவர்களையும் இளைஞர்களையும் தொடர்ந்து, அவர்களது பெற்றோர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். அதோடு நின்றுவிடவில்லை.

மாறாக, இருபத்தி நான்கு மணிநேரமும் போராட்ட களத்தில் இருந்தவர்களுக்கு, உணவு, குடி தண்ணீர் என்று பல்வேறு விதங்களில் உதவி செய்தனர். தமிழ் நாடு முழுவதிலுமான வியாபாரிகளும் அவர்களது சங்கங்களும் கூட இத்தகைய உதவிகளை வழங்கினார்கள். இதுவே, இன்று இலங்கை முழுவதுமாக அரங்கேறி வருகிறது.

இந்த இரு போராட்டங்களும் அந்தந்த அரச தலைமைகளை மட்டுமல்ல, ஆட்சி முறைமை மற்றும் அரசு நிர்வாகம் ஆகியவையும் மாறவேண்டும் என்ற தொனிப்பொருளில் துவங்கியவை.

அதாவது, ஆட்சி மாற்றம் மற்றும் அரச தலைமை மாற்றம் மட் டுமே, பிரச்சினைகளுக்கு முடிந்த முடிவாகி விடாது. (10ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# எரிபொருள் பதுக்கல்காரர்களை மடக்க சம்மாந்துறையில் இனி அதிரடித் தேடுதல்

பொலிஸாரினால் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தால் பொது மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சம்மாந்துறை பிரதேச செயலாளர் தலைமையில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் , நீர்ப்பாசன பொறியியலாளரின் பங்குபற்றுதலுடன் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துரையாடப் பட்டதன்படி கடந்த வருடங்களைப் போன்றுதேவையான அளவுஎரிபொருள் தங்களுக்குக் கிடைப்பதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர் .

எனினும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தொடர்ச்சியாக மக்களின் நீண்ட வரிசை காணப்படுகின்றது . இதற்கு காரணம் சிலர் எரிபொருளை தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்து பதுக்கி வைப்பதே எனத் தகவல் கிடைத்துள்ளது .

எனவே பொலிஸாரினால் திடீர் சோதனை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது .

இவ்வாறு எரிபொருள் பதுக்கி வைத்திருப்போர் சம்பந்தமாக பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் தருமாறு கேட்டுக் கொள்கிறோம் .

இச் சோதனையின் போது கைப்பற்றப்படும் எரிபொருள் அரச உடமையாக்கப்படுவதுடன் உரிய நபருக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபை ஊடாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும். - எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நழுவ விடலாமா?



(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், பிரச்சினையின் தாக்கம், வீரியம் ஆகியவற்றை வைத்து நோக்கும் பொழுது, இலங்கையில் அன்றாட உணவிற்கே மக்கள் அல்லாடும் நிலைமையில், பிரச்சினை ரீதியாக ஜல்லிக்கட்டு போராட்டத்தோடு அதனை ஒப்பிடுவதே தவறான உதாரணமாகும். மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம்.

ஆனால், ஜல்லிகட்டு போராட்டத்தை பொறுத்தவரையில், அந்த உத்தி உடனடி வெற்றியை உறுதி செய்தாலும், அதனை ஒரு நெடுநாள் இயக்கமாக மாற்றுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு மாறி, தங்களில் ஒரு சிலர் அரசியல் தலைவர்களாக முயற்சி செய்து, போராட்டத்தின் தனித்துவத்தை கொச்சைப்படுத்தி விடக்கூடாது என்பதில் போராட்ட வீரர்களும் வீராங்கனைகளும் தெளிவாக, உறுதியாக இருந்தனர். அதில் ஒரு வித நியாயமும் இருந்தது. இன்று வரை, இலங்கை போராட்டத்தின் நிலைமையும் இதுதான்.

**பழைய குருடி, கதவை திறடி**

இன்றைய சூழலில், ஆளும் ராஜபக்ஷகளுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் அனைத்து சமூகங்கள் மற்றும் நாட்டின் நகரம், கிராமம், மலையகம், கடற்கரை பகுதிகள் அனைத்திற்கும் பொதுவான ஓர் இழையோட்டம் இருக்கிறது. இதுவே, இந்தப் போராட்டத்தின் முடிவு வரை தொடரும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதிலும் குறிப்பாக, வெற்றியோ - தோல்வியோ, இந்தப் போராட்டத்திற்கு பின்னர், அதில் பங்குபற்ற பல்வேறு பிரிவினரும், குழுவினரும் தொடர்ந்து தங்களுக்குள் தொடர்பாடலில் இருப்பார்கள் என்று கருத முடியாது. தமிழ் நாட்டின் ஜல்லிக்கட்டு போராட்டத்தை வைத்து பார்க்கும் போது, அதற்கான அறிகுறிகள் எவையும் தற்போதைக்கு இல்லை.

குறிப்பாக, கொழும்பு போன்ற பெரு நகரத்தில், காலி முகத்திடலில் நடைபெறும் மாபெரும் போராட்டத்தில் பங்கு பெறுவோர், தனித்தனி குழுக்களாக, தங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தவரோடே சேர்ந்து நிற்கின்றனர். அடுத்த குழுக்களில் உள்ள எவரையும் அடையாளம் தெரியாது. போராட்டம் முடிந்த ஒரு வாரத்தில், இரண்டு பேர் ஒரே பஸ்ஸிலோ, ரயிலிலோ, விமானத்திலோ, அடுத்தடுத்து அமர்ந்து பயணம் செய்தாலும், அவர்களில் ஒருவர் போராட்டம் குறித்த பேச்சை எடுத்து, அதனை வளர்த்தால் ஒழிய, இருவருக்குமே அடுத்தவர் குறித்து அறிந்து கொள்ள வாய்ப்பில்லை.

இதற்கு அப்பாலும் சென்று, போராட்டம் வெற்றியோ, தோல்வியோ, அதில் பங்கு பெற்ற லட்சக் கணக்கான அரசியல் சாராத, சாதாரண மக்கள், அடுத்த தினமே, தங்கள் தங்களது வேலை, மேற்படிப்பு, குடும்பம் என்று மீண்டும் ஒரு பதுங்கு குழிக்குள் காணாமல் போய் விடுவார்கள். அவர்களை பின்னர் ஒரு முறை, மற்றொரு போராட்ட களத்தில், திடலில் இதே எண்ணிக்கை மற்றும் வேகத்தோடு எதிர்பார்த்தால், அந்த எதிர்பார்ப்பு வீணாகவே முடியும்.

இன்னும் சொல்லப்போனால், இவ்வளவு துடிப்பாக போராட்டத்தில் இறங்கிய இந்த மக்கள் அனைவருமே அடுத்து வரும் தேர்தல்களில், முழு பங்களிப்பு செய்வார்கள் என்று கூட எதிர்பார்க்க முடியாது. தங்களது சமூக - பொருளாதாரப் பின்னணியில், தங்களது தாய், தந்தையர் செய்யாத ஒன்றை செய்து, தெருவில் இறங்கி, பொதுப் பிரச்சினைக்காகப் போராட்டத்தில் குதித்ததே பெரிய விடயம். இந்தப்பங்களிப்புக்குபின்னர், அவர்களைப் பொறுத்த வரையில், தேர்தலில் வாக்களிப்பது எல்லாம் கூட, நேரத்தை வீணடிக்கும் செயல் என்றாகி விடும். அதே சமயம், மற்றொரு பிரச்சினை காரணமாக, பிறிதொரு போராட்டம் நடைபெறுமானால், அதிலும் பங்கேற்கமாட்டார்கள் என்று கருதலாம்.

மொத்தத்தில் பார்த்தால், நாடும், அதனை ஆள்பவர்களும், அதன் பிரச்சினைகளும், 'பழைய குருடி, கதவை திறடி' என்ற நிலைக்கு தள்ளப்படும். அல்லது, தன்னை தானே அவ்வாறு தள்ளிக் கொண்டு, தன் பின்னால், அந்தக் கதவையும் அடைத்துக் கொள்ளும். பின்னர், தற்போதைய மக்கள் எழுச்சி தோன்றுவதற்கு, இதை விட பெரிய பிரச்சினை ஏதாவது தோன்ற வேண்டும். ஆனால். தற்போதைய பிரச்சினைகளின் ஆழத்தையும், அதனால் ஏற்படும் துன்பியல் அனுபவங்களையும் வைத்து நோக்கும்போது, இதை விட மோசமான நிலைமை தோன்றி விடாது என்றே நம்பத் தோன்றுகிறது.

எழுபதுகளின் துவக்கத்திலும், எண்பதுகளின் பின் பகுதியிலும் தென்னிலங்கையில் ஜே.வி. பியின் ஆயுதப் போராட்டங்கள், அடித்தட்டு மக்களின் ஏமாற்றங்களின் உச்சக்கட்ட எதிர் வினையாக கருதப்பட்டது. எழுபதுகளில் வடக்கு, கிழக்கில் துவங்கிய, தமிழ் ஆயுதக் குழுக்கள், அவற்றை தொடர்ந்து, விடுதலைப் புலிகளின் இனப்போராட்டம் எல்லாமே, தொடர்ந்து தவறிழைக்கப்பட்ட ஒரு மக்களின் பதிலடியாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அவற்றை ஒப்பிட்டு நோக்கும் போது, தற்போதைய அறப் போராட்டம், மக்களில் ஒரு சாராருக்கு உப்பு சப்பில்லாத விடயமாகக் கூடத் தோன்றலாம். ஆனால், நாடு சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து, முன்னேறி வரும் சாதாரண தர மக்களின் சமூக - பொருளாதார முன்னேற்றம், அதன் பின்னணியில் தோன்றி மறையும் அவர்களது எண்ணவோட்டம், அந்த அனுபவங்களின் காரணமாக வெளிப்படும் செயல் திட்டங்கள் அனைத்திலும், முந்தைய தலைமுறையினரின் வழிமுறைகள் போல் அல்லாமல், நான்கு சுவர்களுக்குள் வாழும் தங்களது வாழ்க்கை போன்ற ஒரு நெறிமுறை, வரன் முறை இருக்கிறது.

இதுவே நாட்டின் எதிர்கால வெற்றிக்கும் வழி வகுக்கலாம். தோல்விக்கும் காரணமாக முடியலாம். ஆனால், மக்கள் போராட்டத்தில், காலை பத்து மணி முதல் மாலை ஐந்து மணி வரை, அலுவலக நேரம் போல், பெரும்பாலோர் பங்குபெறும் இந்த தலைமுறையில் வேறு எதனையும் அதிகமாக எதிர்பார்த்து விடமுடியாது.

இதற்கு அப்பால் சென்று நோக்கினால், அந்தந்தத் தலைமுறையில் நிலவும் சமுதாய சூழ்நிலைகளை நன்றாக உள்வாங்கிக் கொண்டு, தங்களது போராட்ட முறைகளை தேர்ந்தெடுப்பவர்களே, சிறந்த தலைவர்களாக உருவெடுக்கிறார்கள். தலைமுறைகளாலும் நினைவு கூறப்படுகிறார்கள்.

ஐம்பதுகளில் இருந்த, அரச கருமத்தை நம்பி பயணித்த நாட்டின் தமிழ்ச் சமூகம், அவர்களால் வளர்க்கப்பட்ட அவர்களது இளைய சமூகம் ஆகிய இரு தரப்பினருமே, அவர்களை போராட்டத்திற்கு தயார் படுத்திய தந்தை செல்வா, காந்திய வழியை தேர்ந்தெடுத்தமையால் மட்டுமே, அதில் பங்கு பெற்றார்கள். அவரது பெயரும் இன்று வரை நிலைத்துள்ளதற்கு, அவரது கொள்கைப் பலம் மட்டுமல்ல காரணம். அவரது போராட்ட உத்தியும் கூட முக்கிய காரணம். தந்தை செல்வா முன் வைத்த கோரிக்கைகளைப் போலவே, அவரது போராட்ட முறைகளும் இன்றளவும் சர்வதேசத்திலும் பேசு பொருளாக இருக்கிறது.

அதே சமயம், அடுத்த தலைமுறையை சார்ந்த விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், தனது காலத்தில், தந்தை செல்வாவின் காந்திய வழிகளை தொடர்ந்து பின் பற்றி வந்திருந்தால், அவரது முறைகளுக்கு வெற்றி கிட்டியிருக்குமா என்பதும் சந்தேகமே. ஆனால், அவரது துப்பாக்கி கலாச்சாரமும் அவரது காலத்தை தாண்டி நிலைகொள்ளவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஆனால், இந்த இரண்டு தலைவர்களுக்கும், அவர்களது போராட்ட முறைகள் போற்றப்பட்ட அளவிற்கு, அவர்களது கோரிக்கைகளுக்கு வெற்றி கிட்டவில்லை. எங்கே, இருவருமே தத்தமது காலத்தில், இரண்டு போராட்ட முறைகளையும் கலந்து செயல்படுத்திருக்க வேண்டுமோ? அல்லது, அந்த இரு தலைமைகளுக்கும் புலப்படாத மூன்றாவது பொறிமுறை ஏதாவது இருந்ததா? அல்லது, இன்னமும் இருக்கிறதா? அதனை தற்போதைய அகில இலங்கை போராட்டத்தில் பங்கு பெறும் மக்களுக்கும், அதனை கொச்சைப்படுத்தாமல் தனதாக்கிக் கொள்ள முயற்சிக்கும் எதிர்க்கட்சி அரசியல் தலைமைகளும் இன்னமும் உணரவில்லையா?




**‘உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்ற அது தள்ளிலும் தள்ளாமை தீர்த்து’**

என்ற திருக்குறளை அசைபோட்டுப் பார்க்கும் போது வள்ளுவரின் சூட்சுமமும் நமக்குப் புரிய வரும். ஏன் உள்ளுவது எல்லாம் உயர்வாய் இருக்க வேண்டும்? அது கிடைக்கா விட்டாலும் உயர்வாய் எண்ணுவதை விடக்கூடாது என்று அழுத்தமாகக் கூறக் காரணம் என்ன? சிந்தித்தோமானால் வள்ளுவர் மிகப் பெரிய மனோவியல் உண்மையை நம்மிடம் உரைக்கின்றார்.

நாம் எண்ணும் எண்ணம் என்பது நூலில்லாத பட்டத்தைப் போன்றது. வானத்தில் அது பறந்துகொண்டிருக்கிறது என்பதை விட, மிதந்து கொண்டிருக்கிறது என்பதே சரி. வெறும் பட்டங்களாக அல்ல படங்களாக நாம் எண்ணும் எண்ணங்கள் ஒரு நொடிக்கு ஐந்து லட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் எதை நினைக்கிறோமோ அங்கு சென்ற உடனே நம்மிடம் திரும்புவதாக மனோவியலாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

வள்ளுவர் சொன்ன அந்த ‘உயர்’ என்ற வார்த்தையை கவனியுங்கள். உயர்வாய் நினைப்பன உன்னை உயர்த்தும் என்ற வரிகள் எவ்வளவு பெரிய உண்மையை உணர்த்துகின்றன? வானத்தில் உயரே இருக்கிறது அந்த இரகசியம். நமது சகஸ்ராரத்தில் உயரே இருக்கிறது. உயர்வுள்ளல். கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர். அண்டத்தில் உள்ளதே பிண்டம். பிண்டத்தில் உள்ளதே அண்டம். அதனால் தான் சொல்கிறார்கள், ‘எண்ணம் போல் வாழ்வு’ என்று.

‘நாம் எதை விதைக்கிறோமோ அப்படியே அதை அறுவடை செய்கிறோம்’ என்று இயற்கையின் நியதி உரைக்கிறது. இதையே இயேசு பிரானும், ‘எதை விதைத்தாயோ அதை அறுவடை செய்வாய்’ என்று அழகாக கூறுவார். அதனால்தான் வள்ளுவரும் ‘உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்’ என்று அழுத்தமாகக் கூறுகிறார். அந்த உயர் உள்ளல் நமது சகஸ்ராரத்தின் உயரே இருக்கிறது. உயர் என்ற சொல்லே நமக்கு உயர்வைக் கொண்டு வரும்.

எண்ணங்களை மாற்றினால் வாழ்க்கை மாறிவிடும் என்பார்கள். கண்ணுக்குத் தெரியாத, விண்ணுலகத்தில் எண்ணமுடியாத விடயங்கள் பல கோடி நம்மைச் சுற்றிலும் உள்ள காற்று மண்டலத்தில் சக்திகள் அனைத்தும் இருக்கின்றன. நாம் எண்ணும் எண்ணங்களை மனம் உள்வாங்கி கிரகித்து மீண்டும் அதனைச் செயல்படுத்த ஆழ்மனத்திற்கு அனுப்பி வைக்கிறது. இவை எல்லாம் நொடிப் பொழுதில் நடக்கும் இறைவனின் அறியப்படாத இரகசியங்கள். நம் எண்ணமும் கண்ணாடியும் ஒன்றுதான். கண்ணாடி நம் பிம்பத்தைப் பிரதிபலிக்கிறது. அதேபோலத்தான் நம் எண்ணமும் வாழ்க்கையும் நம் எண்ணம் நன்றாக இருக்கும் போது வாழ்க்கையும் நன்றாகவே அமைகிறது. இதை நம்பி வாழ்வோர்க்கு அந்த நம்பிக்கையே பெருந்துணையாகிறது.

‘தீதும் நன்றும் பிறர்தரவாரா!’. துன்பம் வரும் போதெல்லாம் பிறரையோ அல்லது தன்னையோ நொந்துகொள்வதைத் தவிர்த்து எங்கு எப்போது செய்த வினையின் பலனை இப்போது அனுபவிக்குறோம் என்பதை யோசிக்க வேண்டும். அதை சரி செய்ய முயலவேண்டும். முடியவில்லை எனில் அதன் போக்கில் அதை விட்டுவிட்டு தன்போக்கில் செல்லவும். காலம் எதையும் மாற்றக்கூடியது. எந்த பிரச்சினையையும் மாற்றவல்ல சக்தி கொண்டது.

கடந்த காலத்தில் வாழ்வது எந்தவித பயனும் அளிக்கப்போவதில்லை. அது நம்மிலும் மேலும் மேலும் எதிர்மறை எண்ணங்களைத்தான் தோற்றுவிக்கும். நம் எதிர்காலமும் அது போலவே அமையும். ஆகவே ஒரு மகிழ்வான எதிர்காலம் அமைய, நம்முடைய இன்றைய நிலை மிகவும் முக்கியமானதாக ஆகிறது. இன்று நம் மனதில் முதன்மையாக நேர்மறை எண்ணங்களுடன் ஒரு மகிழ்வான மன நிலையில் வாழ்ந்தால், அதே போன்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்குகிறோம். எண்ணிய எண்ணியாங்கு,எண்ணங்களே செயலைத் தீர்மானிக்கின்றன. எண்ணங்களுக்கு வலிமை உண்டு. அதனால்தான் எண்ணம் போல வாழ்வு என்றும், எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய் என்பதும் இந்தவாழ்வில்வலிமைவாய்ந்தவார்த்தைகளாகவே கூறப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த எண்ணங்களை நாம் எப்படி கையாளுகிறோம் என்பதிலேயே வாழ்வின் சூட்சுமம் அடங்கி உள்ளது.‘உள்ளத்தனையது உயர்வாக’ வேண்டுமெனில் உயர்ந்த எண்ணங்களை எண்ண வேண்டும்.

ஆடம்பரமாக வாழ்வதுதான் வாழ்க்கை என்ற வகையில் மக்களின் எண்ணங்கள் மாறி வருவதால் கொலை, கொள்ளை, வன்முறை அதிகரித்து வருகின்றன. மகாபாரதத்தில் கர்ணனின் இறப்பு தற்செயலாக நடந்தது அல்ல, மாறாக கர்ணன் ஏற்கனவே போட்ட எண்ணத்தின் விளைவுதான் அந்நிலைக்குக் காரணம் என அறியப்படுகிறது. ஆக, இந்த மண்ணுலகில் யாராக இருந்தாலும் சரி எண்ணங்களே நம் வாழ்க்கையை அமைக்கின்றன. எண்ணத்தின் வலிமையே நம் வாழ்வின் தரம், உயர்வு எல்லாம். உலகை வெல்வதற்கு முன் தன்னை வெல்ல வேண்டும் என்று சொன்னதும் இதற்காகத்தான் தன்னை என்பது நாம் எண்ணும் எண்ணங்கனே!.

உலகின் மிகச் சிறந்த வைரம் நம்மிடம் தோன்றும் எண்ணங்களே. எங்கு பார்த்தாலும் மனித மனங்களில் ஏதேதோ எண்ணங்கள். பார்க்கும் மனித முகங்கள் எல்லாம் சிந்தனைவயப்பட்டனவாகவே தோன்றுகின்றன. இறுக்கமான மனிதர்களாகவும், இயந்திர கதியான மனிதர்களாகவுமே தென்படுகின்றனர். எண்ணக் குவியல்களின் கலவைகளையும், சிந்தனை ரேகைகளையும் கொண்ட மக்கள் கூட்டத்தை காணும் திசையெல்லாம் பார்க்க முடிகிறது. சக மனிதனைக் கண்டு மகிழும் உள்ளமோ, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதலோ இல்லாமல் தனயொரு உலகில் மாறிவிட்டது. இதற்கெல்லாம் அடிப்படை யாதென்று சிந்தித்தால் அவரவர்க்கான தனிப்பட்ட எண்ணங்களே ஆகும். எண்ண ஓட்டங்கள் தவறாக இருக்கும் போது அங்கே வாழ்வியல் நெறிகளில் மாற்றம் ஏற்படுகிறது. மனித நடத்தை மாறுபாடுகளை மாற்றி அமைக்கும் வல்லமை எண்ணங்களுக்கே உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

**- தெய்வேந்திரம் வஜிதா -**
**(நான்காம் வருடம், சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

# யோகர் சுவாமிகளுடனான .....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறியவாறு தனது பயணத்தைத் தொடர்ந்தார் சுவாமிகள்.

முதியவருக்கு ஆச்சரியம். தனது பெயரை எப்படி அவர் அறிந்தார்? இன்றுதானே முதலில் தரிசித்தேன்! வீட்டுக்குச் சென்று நடந்ததை கூறினார். எல்லோருக்கும் மகிழ்ச்சி. ஆனாலும் பாம்புகள் அதிகம் உலவுதடா என்றாரே என்ற சஞ்சலம் எல்லோர் மனதிலும் தோன்றியது. பயப்படாதே என்றும் கூறியதால் சற்றுத் துணிவாகவும் இருந்தது. என்றாலும் தம்மளவில் கவனமாகவும் இருந்தார்கள். ஆறுமுக அப்புவை எங்கும் இரவில் செல்ல விடாது பாதுகாப்பாக இருந்தனர்.

இவரது வீட்டில் இருந்த சிறிய குடில் ஒன்று வேய வேண்டி இருந்தது. தென்னை ஓலைக் கிடுகுகளைச் சேகரித்து கட்டி வீட்டு வாயிற்பக்கம் வைத்திருந்தனர். வேயவேண்டிய நாளும் குறிக்கப்பட்டிருந்தது. இப்படியிருக்கையில் முதல் நாள் இரவு உணவு அருந்திவிட்டு அம்மா தாயே அடைக்கலம் என்று கூறியவாறு தனது கட்டிலில் உறங்கலானார். சிறிது மணிப்பொழுது கழிய அவரது படலைப் பக்கமாக இருந்து ஆறுமுக அப்பு என்று யாரோ கூப்பிடுவது போன்ற சத்தம் கேட்டது. அப்பு எழுந்து ஆர் தம்பி கூப்பிட்டது? என்று கேட்டவாறு கையில் லாம்பையும் கொண்டு படலைப் பக்கம் சென்றார். அவர் வளர்ப்பு நாயும் பின்னால் சென்றது. அங்கு யாரும் இல்லை. யார் கூப்பிட்டது என்று யோசித்தவாறு திரும்பி வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார். கிடுகுக் கட்டினுள் தனது கடமையை நிறைவேற்றவெனக் காத்திருந்த பாம்பு ஒன்று இவரது வருகை கிட்டியதும் சீறியது. உடன் வந்த நாய் பாம்பினை வாயினாற் கவ்விக் கொண்டது. எனினும் படமெடுத்த பாம்பு சீறிக்கொண்டு அப்புவின் காலில் காயத்தை ஏற்படுத்தி விட்டது. வீட்டுக்காரர் எழுந்தோடி வந்தனர். பாம்பை அடித்தனர். அப்புவுக்குச் சிகிச்சைகள் சிலமாதம் தொடர்ந்தன. உறவினர் கவலை கொண்டனர். அப்பு ஆறுமுகம் பயப்படாதே என்ற அருள் வாக்கு அவர்கள் மனதுக்கு ஆறுதல் தந்தது. ஆறுமுக அப்பு இனி எழும்பமாட்டார் என்று சிலர் முடிவு கொண்டனர். மாதக்கணக்கில் சிகிச்சை நடைபெற்று அப்பு பூரண சுகம் பெற்றார். சிவயோக சுவாமிகளின் அருள் வாக்கின் மகிமை உணர்ந்து பலரும் துதித்து நின்றனர். ஆறுமுக அப்புவும் எழுந்து நடமாடி, மீண்டும் சுவாமிகளின் தரிசனம் பெற்று, வணங்கி பல ஆண்டுகள் வாழ்ந்து இவ்வுலகை நீத்தார். ஆறுமுகம் பயப்படாதே என்ற சுவாமிகளின் அருள் வாக்கு அவருக்குத் துணிவைத் தந்தது. இடர் களைய உதவியது. சுவாமிகளின் மெய்ப் பக்தராகவே வாழ்ந்தார். இவ்வாறு பல மெய்யடியார்களை ஆட்கொண்ட குருநாதன் புகழ் உலகுள்ளவரை மறையாது.

“எப்பவோ முடிந்த காரியம்”

**- திரு.கா.இரகுநாதன் -**
**தேவார அப்பன்,**
**நாயன்மார்கட்டு.**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.04.2022இல் வெளியிடப்பெற்றது.